எனது இல: D14ஜெ.பு.மட்டுப்படுத்தப்பட்டஆட்சேர்ப்பு/2025
சிறைச்சாலைகள் தலைமையகம்,
கொழும்பு 09.
2026.01.27

அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்கள் மற்றும்,
உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர்கள்

**<u>சிறைச்சாலைகள் திணைக்களத்தின்,II ஆம் தர ஜெயிலர், /II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர், பதவிக்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்துப் போட்டிப்பரீட்சை – 2025 (2026)</u>**

இந்தத் திணைக்களத்தில் IIஆம் தர ஜெயிலர்/ IIஆம் தர புனர்வாழ்வு அலுவலர்பதவிகளில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 05ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2025.05.31 ஆம் திகதியில் பூர்த்தி செய்துள்ள அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கேரப்படுகின்றன.

| | |
|---|---|
| IIஆம் தரஜெயிலர் வெற்றிடங்களின் எண்ணிக்கை(ஆண்) | - 28 |
| IIஆம் தரஜெயிலர் வெற்றிடங்களின் எண்ணிக்கை (பெண்) | - 04 |
| IIஆம் தர புனர்வாழ்வு வெற்றிடங்களின் எண்ணிக்கை (ஆண்) | - 11 |
| IIஆம் தரபுனர்வாழ்வு வெற்றிடங்களின் எண்ணிக்கை (பெண்) | - 03 |

02. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளமான www.donets.lkஇல் "Our Services"என்பதன் கீழுள்ள"Online Applications – Recruitment Exams/E.B.Exams"என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2026.02.09 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதோடு 2026.03.09 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும். இந்தப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் 2026மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

- விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் இறுதி தினம் வரை தாமதிப்பதால் ஏற்படுகின்ற எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. அலுவலர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைதங்களது தனிப்பட்ட பெயர்வழிக்கோப்பில் உட்சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம்கையளித்தல் வேண்டுமென்பதோடு,நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றசந்தர்ப்பத்தின் போது நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். இது

தொடர்பாக தகமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து அலுவலர்களும் அறிந்துகொள்ளக்கூடியவாறு பகிரங்கப்படுத்தி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

04. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:

4.1. 10/2025ஆம் இலக்க 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் IIஆம் தர ஜெயிலர்/ II ஆம் தர புனர்வாழ்வு பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்,

ரூபா. 55,410 - 7×670- 2×890- 25×1,190- 91,630 (RS 3 – 2025) ஆகும்.

05. தகைமைகள் :

5.1. அனுபவம் :

I. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைத்திட்டத்தின் பிரகாரம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்ற தினத்திற்கு உடன்முன்னரான ஐந்து (05) ஆண்டுகளுக்குள் ஐந்து (05) சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் மற்றும் திருப்திகரமான மட்டத்தின் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

II. சிறைச்சாலைத் திணைக்களப் பதவியொன்றில் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட சேவைக் காலத்தை பூரணப்படுத்துகின்ற அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.

அட்டவணை 01

| | பதவி | தேவையான தொடர்ச்சியான நிரந்தர சேவைக்கால வருடங்கள் |
|---|---|---|
| 01 | சார்ஜென்ட் | 06 |
| 02 | கைத்தொழில்நிர்வாகி | 06 |
| 03 | I ஆம் தர வாழ்க்கைத்தொழில் ஆலோசகர் | 06 |
| 04 | விவசாயஆலோசகர் | 06 |
| 05 | கைத்தொழில்போர்மன் | 06 |
| 06 | சிறைக்காவலர்கள் | 12 |
| 07 | சாரதி | 12 |
| 08 | விவசாய மேற்பார்வையாளர்/ ஓவசியர் | 12 |
| 09 | மருந்துக்கலவையாளர் | 12 |
| 10 | II தர வாழ்க்கைத்தொழில்ஆலோசகர் | 12 |
| 11 | தற்போதுபணியில் ஈடுபட்டுள்ள,அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டமொன்றைக் கொண்டுள்ள மேலேயுள்ள ஏதேனும்ஒருபதவியில் பதவிவகிக்கின்ற ஓர் அலுவலர். | 05 |
| 12 | உடற்பயிற்சி ஆலோசகர் | 12 |

**குறிப்பு**

மேற்படி பதவிகளை வகிக்கின்ற அலுவலர்கள் தகைமை பெறுவதற்குத் தேவையான சேவைக் காலத்தை பூரணப்படுத்தாதுள்ள சந்தர்ப்பமொன்றில், அவர்களின் முன்னைய பதவியில் பணியாற்றிய சேவைக் காலத்தை தற்போதைய பதவியுடன் சேர்த்துப் பன்னிரண்டு (12) ஆண்டுகள் திணைக்களமையச்சேவையைப்பூரணப்படுத்துவார்களாயின் எழுத்துப்பரீட்சைக்குத்தோற்றுவதற்கான தகமையைப் பெறுவார்கள்.

5.2. உடல் தகமைகள்: ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும்மற்றும்அந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல்ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

5.3.ஏனையவை

I. இலங்கைப்பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்குரிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் உரிய திகதியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருக்காதிருத்தல் வேண்டும்.
V. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான 5 தொடக்கம் 6 வரையிலான தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் /வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அந்த தகைமைகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

06. வயது எல்லை: ஏற்புடையதாக மாட்டாது.

07. ஆட்சேர்ப்பு முறை: எழுத்துப் பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்று அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து அடிப்படைத் தகமைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**7.1. எழுத்துப் பரீட்சை**:

| பாடம் | காலம் | உயர்ந்த பட்ச புள்ளிகள் | சித்திபெறத் தேவையான புள்ளிகளி |
|---|---|---|---|
| 01. சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் திணைக்கள நிலையியற் கட்டளைகள் | 03மணித்தியாலம் | 100 | 40 |
| 02. மனித உரிமைகள் மற்றும் கைதிகள் தொடர்பான சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

7.1.1 பரீட்சைக்கான பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் திணைக்கள நிலையியற் கட்டளைகள் | குறித்த 2 புத்தகங்களில் உள்ள அனைத்துப்பிரிவுகளும். |
| 02. மனித உரிமைகள் மற்றும் கைதிகள் தொடர்பான சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் | இலங்கை மனித உரிமைகள் பேரவையின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் கைதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை உள்ளடங்கும் |

08. வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை:

8.1. முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைநியமனம் செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் (சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம், திணைக்கள நிலையியற் கட்டளைகள்மற்றும் இளம் தவறாளிகள் பயிற்சி கல்லூரிகள் சீர்திருத்த கல்லூரிகள் கட்டளைச் சட்டம், தாபன விதிக் கோவை மற்றும்அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி முறைமைகள்)

8.2. இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைநியமனம் செய்யப்பட்டு 05 ஆண்டுகளுக்குள் (மனித உரிமைகள் மற்றும் கைதிகள் தொடர்பான சர்வதேச சட்டங்கள்). சித்தியடைதல் வேண்டும்

09. விண்ணப்பிக்கும் முறை:

9.1. நிகழ்நிலை(Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் மாத்திரம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி, செல்லுபடியான விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமையினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு (E-mail) அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி

செய்வதற்கு முன்னர்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத்தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தும் போது அந்த அறிவுறுத்தல்களைஅவதானமாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர்அதில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

9.2. விண்ணப்பத்தில் விருப்பம் உரியவாறு தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டமென்பதோடு தெரிவிக்கப்பட்ட விருப்பத்தை பின்னர் மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9.3. விண்ணப்பதாரர் பரீட்சை அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதோடு, பரீட்சை தினத்தன்று அவ்வாறு கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையொன்று இல்லாமல் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது..

9.4. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் அல்லது அந்த தினத்திற்கு முன்னர், உரியபரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன்சரியாகப்பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றி இணைய (வெப்) அறிவிப்பு/ விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள்இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் அது குறித்து விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கை கடிதத்தைஇணைய (வெப்) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழல்பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைப்பரீட்சித்துப் பார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தை தொடர்பு கொண்டுவிண்ணப்பபடிவத்திற்கமைய குறித்த திருத்தங்களைச் செய்துகொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின்போது திருத்தங்களுக்காகச்செய்யப்படுகின்றகோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

9.5. விண்ணப்பதார் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகமைகளைப் பூர்த்தி செய்துள்ளமைக்கான அங்கீகாரமாக கருதப்படுதல் கூடாது.

9.6. அனுமதி அட்டை பரீட்சித்துப் பார்க்கப்பட்டு ஏதேனும் திருத்தங்கள் இருப்பின்,பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவத்தின் பிரகாரம் தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காகச்செய்யப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

9.7. அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவானபரீட்சைசட்ட விதிகளுக்கு அமைவாகச் செயற்படுவதற்குக் கடமைப்பட்டுள்ளனர்.

10. பரீட்சைக் கட்டணம்:

- பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/=. ஆகும். பரீடசை கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறையில் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண முறைகளின் கீழ் மாத்திரம் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. எந்தவொருவங்கியினதும் கடன் அட்டைகள் மூலம் (Any Bank Credit Card)
ii. இணையம் மூலம் கொடுப்பனவுசெய்ய முடியுமான எந்தவொரு வங்கி வரவு அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவோர் இலங்கை வங்கி கிளை மூலம்(Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(அ) மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சைக்குரியதொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS)ஒன்றின் மூலம்அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத்தொகையும் செலுத்துதல் வேண்டுமென்பதுடன்,பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்றதவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளக்கொடுப்பனவு செய்யப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

11. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:

11.1.பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம்தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தைநிரூபித்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத்தகவாறுமுகம் மறைக்கப்படாதவாறும்மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதையும் உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து

வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

12. போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:

12.1. விண்ணப்பதாரிக்கு ஒருவருக்குத்தேவையான தகைமைகள் இல்லையென்பது தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது, பரீட்சை நடாத்தப்படும் காலத்தின்போது அல்லது பரீட்சைக்கு பின்னர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும்அவரின் பரீட்சாரத்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் தரப்பட்டுள்ளஏதேனு மொரு விடயம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும்அதனைச் சமர்பித்திருப்பது தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமானதொரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் அரசாங்கசேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

13.பொதுவான விடயங்கள்:

13.1. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.அந்தசட்ட விதிமுறைகளை மீறினால்பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும். ***"பரீட்சை முடிவுகள் தொடர்பில்பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களின் முடிவே இறுதி முடிவாகும்."***

13.2. இதில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பாகவும் மற்றும் இந்தவெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்படும்.

13.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கு இடையில் இணக்கமின்மை ஏற்படுமாயின் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதாகக் கருதி அலுவல்கள மேற்கொள்ளப்படும்..

**எச்.எம்.என்.சீ. தனசிங்க**
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (ப.க)

H.M.N.C. Dhanasinghe
Commissioner General of Prisons (Acting)
Prison Headquarters
Colombo 09.